**சுருக்கம்**

கூட்டுறவு – அறிவிப்புகள் – 2014–2015–ம் ஆண்டிற்கான மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – 21 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை நகர்ப்புற கூட்டுறவுக் கடன் சங்கங்களாக மாற்றியமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎன்1) துறை**

**அரசாணை (நிலை) எண்.85** **நாள். 12.09.2014**

**ஜய வருடம்**
**ஆவணி மாதம் 27ம் நாள்.**
**திருவள்ளுவர் ஆண்டு 2045**
**படிக்க :**

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கடிதம் ந.க.எண். 2186/2014 தொவேச 1 நாள் 22.08.2014

––––

**ஆணை**

மாநிலத்தில் தற்பொழுது 4,530 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. எனினும் கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருப்பூர் ஆகிய மாநகரங்கள் கடலூர், காஞ்சிபுரம் ஆகிய நகரங்களை சுற்றியுள்ள பகுதிகளில் நகரமயமாக்குதல் காரணமாக விளை நிலங்கள் குறைந்து போன நிலையிலும் அதன் காரணமாக அங்கிருந்து ஒரு சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர்கடன் பணி தொடர இயலாத நிலையிலும் இருந்து வந்தன. இத்தகைய சங்கங்களின் செயல்பாடுகளை பன்முகப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ள நிலையில் 2014–2015–ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள் :–

“பெருநகரங்களின் அருகில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின் அதிகார எல்லைக்குள் பயிர் செய்ய ஏதுவான நிலங்கள் இல்லாத சூழலில் பயிர்க்கடன்கள் வழங்க வாய்ப்பு இல்லாத நிலையைக் கருத்தில் கொண்டு, அவற்றின் அதிகார எல்லைக்குள் வசிக்கும் உறுப்பினர்களுக்கு நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள் அளிக்கும் சேவைகளான நகைக்கடன், வீட்டு அடமானக் கடன், மற்றும் வீட்டு வசதி கடன்கள் வழங்க ஏதுவாக கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருப்பூர் ஆகிய மாநகரங்கள் மற்றும் கடலூர், காஞ்சிபுரம் ஆகிய நகரங்களுக்கு அருகில் செயல்பட்டு வரும் 21 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் நகரக் கூட்டுறவு கடன் சங்கங்களாக மாற்றியமைக்கப்படும்”.

2. இவ்வறிவிப்பு தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தனது கருத்துருவில், பயிர்செய்ய ஏதுவான நிலங்கள் இல்லாத சூழலில் பயிர்க்கடன் வழங்க இயலாத நிலையைக் கருத்தில் கொண்டு கோயம்புத்தூர், மதுரை, சேலம் திருப்பூர் ஆகிய மாநகரங்கள் கடலூர், காஞ்சிபுரம் ஆகிய நகரங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை மாற்றம் செய்ய, தொடர்புடைய மண்டல இணைப்பதிவாளர்கள் கருத்துருக்களை அளித்துள்ளனர் என்றும், இணைப்பில் கண்டுள்ள 21 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களாக மாற்றப்படும் நிலையில், இவை அதிக அளவில் நகைக்கடன், வீட்டு அடமானக்கடன் மற்றும் வீட்டு வசதிக் கடன்கள் வழங்க வாய்ப்புகள் ஏற்படும். மேலும், இவற்றின் பங்கு மூலதனம் மற்றும் ஒதுக்கீடுகள் ரூ.1 இலட்சத்திற்கு மேற்படும் பட்சத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் மேற்பார்வையின் கீழ் வரவும் அதன் காரணமாக அவற்றின் மீதான பொது மக்களின் நன்னம்பிக்கை(Goodwill) அதிகரித்து அதிக அளவில் வைப்புத் தொகைகளை திரட்டவும் வாய்ப்புகள் உள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேற்கூறிய சூழ்நிலையில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் 2014–2015–ம் ஆண்டிற்கான அறிவிப்புகளில் ஒன்றான, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள (இணைப்பிலுள்ள) 21 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களாக மாற்றி அமைக்க அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.பி. நிர்மலா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை – 10.
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜி) துறை, சென்னை – 9.
இகோ/ உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

## இணைப்பு

## கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்(சிஎன்1)துறை

**அரசாணை (நிலை) எண் : 85, நாள். 12.09.2014**

| மண்டலத்தின் பெயர் | தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பெயர் |
|---|---|
| கோயம்புத்தூர் – 5 | உப்பிலிபாளையம் |
| | வீரகேரளம் |
| | சரவணன்பட்டி |
| | காலப்பட்டி |
| | சூலூர் |
| கடலூர் – 6 | பி.பெரியகாட்டுப்பாளையம் |
| | பூங்குணம் |
| | பார்வதிபுரம் |
| | வில்வராயநாதம் |
| | வசந்தராயபாளையம் |
| | உய்யகொண்டரவி |
| காஞ்சிபுரம் – 4 | உத்திரமேரூர் |
| | தண்டலம் |
| | சிங்கபெருமாள் கோவில் |
| | அச்சிறுப்பாக்கம் |
| மதுரை –1 | பசுமலை |
| சேலம் –1 | சின்னதிருப்பதி |
| திருப்பூர் –1 | விஜயபுரம் |
| வேலூர் – 2 | தொரப்பாடி |
| | விருப்பாச்சிபுரம் |
| திருவள்ளூர் –1 | நூம்பல் |

எம்.பி. நிர்மலா
அரசு முதன்மைச் செயலாளர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்